**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 12.09.2019 ((முற்பகல்)**

**முன்னிலை**
**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**
**•••••••••**

**வழக்கு எண்.SA 2786/E/2017 (SA 2884/2017)**

திரு வெ.முருகன் ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கரூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 02.11.2016 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 19.12.2016 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 10.04.2017 |

******

**ஆணை**

இன்று (12.09.2019) முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு வெ.முருகன் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு சீ.முரளிதரன், தனி வட்டாட்சியர் (இலங்கை அகதிகள் முகாம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 02.11.2016 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் தான் 03.10.2016 தான் வழங்கக் கோரிய ஆவணங்களை வழங்கக் கேட்டுக் கொண்டதின் பேரில் **"தங்களது கோரிக்கை தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) அல்ல. எனவே தங்களது மனு, கோரிக்கை தொடர்புடைய மேற்கண்ட பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற தகவல் தெரிவிக்கப்படுகிறது"** என்று தெரிவித்து தான் கோரிய ஆவணங்களை வழங்கிட பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், கரூர் வட்டம் அவர்களுக்குத் தனது மனுவை மாற்றம் செய்து அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, எனவே மனுதாரரான தான் கோரிய ஆவணங்களுக்கும், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியருக்கும் என்ன சம்பந்தம் உண்டு என்ற தகவலைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 19.12.2016 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், கரூர் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 09.01.2017 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 10.04.2017 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (12.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான தனி வட்டாட்சியர், இவ்வழக்கு தொடர்புடைய பொருள் குறித்து ஏற்கெனவே மேல்முறையீட்டாளர் ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ள பிறிதொரு இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணையம் 22.08.2019 அன்று விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் ஒரே தகவலைக் கோரி வெவ்வேறு மனுக்களைத் தாக்கல் செய்து, ஆணையத்திற்கு வெவ்வேறு இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளதும், இப்பொருள் தொடர்பாக ஏற்கெனவே ஆணையத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதும் தெரிய

வருகிறது. எனவே இவ்வழக்கில் மேலும் விசாரணை செய்ய ஏதுமில்லையென ஆணையம் கருதி, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 2786/E/2017 (SA 2884/2017)**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கரூர் மாவட்டம்.

**மனுதாரர்**

திரு வெ.முருகன்,
த/பெ. வெள்ளைச்சாமி,
பெரியவடுகப்பட்டி,
வெண்ணைமலை (அஞ்சல்),
கருர் மாவட்டம் - 639 006.

Copy to: Judgement File.
16/09/19